# History of India from 1206 to 1707 A.D.

# Unit – II

## Contents

1. Mohammed – bin- Tughluk ........................................ 2

2. Timur Invasion ........................................ 6

3. Lodi Dynasty – Sikander Lodi – Ibrahim Lodi ........................................ 10

4. Administration of Delhi Sultanate: ........................................ 13

## 1. Mohammed – bin- Tughluk

துக்ளக் வம்சம் கடைசி கில்ஜி சுல்தானைக் கொன்றுவிட்டு சுல்தான் ஆன குஸ்ரூஷா, ஐந்து மாதங்கள் (ஏப்ரல்-செப். 1320) மட்டுமே ஆட்சி செய்தார். இடையராக இருந்து இஸ்லாமியரான அவருக்கு துருக்கியரிடமிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது. இதை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட காஸி மாலிக், குஸ்ரூஷாவைக் கொன்றுவிட்டு (செப்டம்பர் -1320) கியாசுதீன் துக்ளக் காஸி என்று பெயரில் டெல்லி சுல்தான் ஆனார். துக்ளக் வம்சத்தை நிறுவியரும் காஸி என்ற பட்டப்பெயர் வைத்துக் கொண்ட முதல் டெல்லி சுல்தானும் இவரே.

1320 முதல் 1325 வரை ஆட்சி செய்த கியாசுத்தீன் துக்ளக் இறந்ததும், உலுக்கான் என்ற பட்டம் பெற்ற முகம்மத் ஜவ்னா கான், முகமது பின் துக்ளக் என்ற பெயரில் டெல்லி சுல்தான் ஆனார். எளிய சிந்தனை, உயர்ந்த நோக்கங்கள், சிறந்த குணநலன்கள் இவை கொண்டிருந்த முகமது பின் துக்ளக் ஒரு ஒப்பற்ற தலைவர். "தொலைநோக்கு மட்டும் இல்லாதிருந்தால் அவரும் அவரது திட்டங்களும் தோல்வி கண்டன" என்பர். ஜியாவுத்தீன் பரணியின் "தரிக்கி ஃபெரோஸ்ஷாஹி என்ற நூலும், இப்ன் - பதூதாவின் பயணக் குறிப்புக்களும் துக்ளக் என்று அழைக்கப்படும் முகமது பின் துக்ளக் பற்றியும் அவரது சாதனைகள் பற்றியும் தெளிவாக உரைக்கின்றன.

**துக்ளக்கின் இளமைக் காலம்:** "பக்ருதீன் முகமது ஜீனாகான்" என்ற இயற்பெயர் கொண்ட முகமது பின் துக்ளக், சிறுவயதிலிருந்தே புத்தி கூர்மை உடையவராக இருந்தார். கில்ஜி வம்ச கடைசி அரசர் குஸ்ரூவின் லாயத்தில் குதிரை லாயத் தலைவராக துக்ளக் நியமிக்கப்பட்டார். இவரது தந்தையும் துக்ளக் வம்சத்தை ஸ்தாபித்தவருமான "சியாசுதீன் துக்ளக்', இவரை தன் அரியணை வாரிசாக நியமித்ததுடன் உலுக்கான் என்ற பட்டமும் கொடுத்தார். 1323-ல் வாரங்கல் அரசர் இரண்டாம் பிரதாபருத்திரருக்கு எதிராகவும் ஒரிசா மீதும் படையெடுத்து உலுக் கான் வெற்றி பெற்றார். வெற்றி வாகை சூடி வரும் பட்டத்து இளவரசரை வரவேற்க அமைக்கப்பட்ட பந்தல் சரிந்ததில் சிக்குண்டு சுல்தான் கியாசுதீன் துக்ளக் இறந்தார். அதன் மூலம் தந்தைக்கு பிறகு 1325-ல் முகமது பின் துகள்க் சுல்தான் ஆனார்.

**முகமது பின் துக்ளக்கின் ஆட்சிமுறை:**

1325 முதல் 1351 வரை சுல்தானாக இருந்த முகமது பின் துக்ளக், பேரரசின் வருவாயைப் பெருக்கவும் தலைநகரத்தைக் காப்பாற்றவும், நாணய முறையில் மாற்றம், செய்யவும் விரும்பினார். இவ்வாட்சி முறை நடவடிக்கைகள் யாவும் வீண் முயற்சியாயின.

**தோவாப் மீது வரி விதிப்பு:** சுல்தான் துக்ளக்கின் வள்ளல் தன்மையால் அரசுக் கருவூலம் காலியாயிற்று. எனவே கருவூலத்தை நிரப்பவும் தன்திட்டங்களுக்கும் படையெடுப்புகளுக்கும் தேவைப்படும் நிதியைத் திரட்ட வேண்டியது அவசியமாயிற்று. இதற்காக தோவாப் பகுதி (கங்கை-யமுனை நதிகளுக்கு இடையே உள்ள செழிப்பான பகுதிக்கு தோவாப் என்று பெயர்) மீது, 1325-27ல், நிலவரியை அதிகப்படுத்தியதுடன் பல புதிய வரிகளை விதித்தார். துக்ளக் வரிகள் இரட்டிப்பாக்கப்பட்டன என பதௌனியும் பத்து மடங்கு அதிகமாக விதிக்கப்பட்டன என பரணியும் கூறுகின்றனர்.

வரி அதிகரிக்கப்பட்ட அதே காலத்தில் துரதிருஷ்டவசமாக பஞ்சமும் மக்களை வாட்டியது. ஆனாலும் வரி கடுமையாக வசூலிக்கப்பட்டது. வரி கொடாதோர் தண்டிக்கப்பட்டனர். எனவே குடியானவர் அழுது புலம்பினர். செல்வந்தர்கள் அரசை எதிர்க்கத் துணிந்தனர். சில இடங்களில் கலகமும் ஏற்பட்டது. இதனால் மக்களிடம் மதிப்பிழந்தார் துக்ளக்.

வளமான தோவாப் பகுதி மீது வரி விதித்தது சரியே. ஆனால் திடிரென ஏற்பட்ட பஞ்சத்தால் சுல்தானின் திட்டம் தவிடு பொடியாயிற்று. பஞ்சத்தைப் போக்க கடன் வழங்கல், குடிநீர் வசதி செய்தல் போன்ற பல நிவாரண நடவடிக்கைகள் செய்ய வேண்டியதாயிற்று. எனவே வருவாய் கிடைப்பதற்கு பதிலாக செலவே அதிகமாயிற்று.

**தலைநகரை மாற்றுதல்:** டில்லியிலிருந்து தௌலதாபாத் என்றழைக்கப்பட்ட தேவகிரிக்கு சுல்தானியத்தின் தலைநகரை மாற்ற துக்ளக் முயற்சி செய்தார். அடிக்கடி நிகழும் மங்கோலியப் படையெடுப்புகளிலிருந்து தலைநகரைக் காப்பாற்றவும், சுல்தானியத்தின் மையத்தில் தலைநகர் இருக்கவும், தலைநகராக தௌலதாபாத் இருப்பது தென்னிந்தியப் படையெடுப்புகளுக்கு உதவியாக இருக்கும் என்பதற்காகவும் தலைநகரை மாற்றலாம் என துக்ளக் நினைத்தார் எனப்படுகிறது.

1326-27ல் தலைநகரத்தை டில்லியிலிருந்து 700 மைல் தூரத்திலுள்ள தேவகிரிக்கு மாற்றி அதற்கு தௌலதாபாத் என்று துக்ளக் பெயரிட்டார். டில்லியிலுள்ள அரசின் தலைமையகம், செயலகங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றை மாற்றியதுடன் அங்கு வசித்த எல்லா மக்களையும் புதிய தலைநகருக்கு செல்லுமாறு கட்டளையிட்டார். குருடர், செவிடர், உடல் ஊனமுற்றோர், நாய்கள், இவை கூட

டில்லியில் தங்க அனுமதிக்கப்படவில்லை. டில்லியில் உள்ள எந்த வீட்டிலிருந்தாவது அடுப்புப் புகை வருகிறதா என்று உப்பரிகையிலிருந்து சுல்தான் கண்காணித்தார் என்று கூட சொல்லப்படுகிறது.

கலிங்கப் போருக்குப் பின் ஞானம் பெற்ற அசோகரைப் போல மக்களின் துன்பங்களைக் கண்ட துக்ளக், தௌலதாபாத்தை விட்டு பழையபடி டில்லிக்கே செல்லுமாறு மக்களை பணித்தார். இதனால் மக்கள் மேலும் துன்பமுற்றனர். புதிய தலைநகர் மக்களற்ற காடாயிற்று. தன் பழைய பெருமையை டில்லி மீண்டும் அடைய பல ஆண்டுகள் ஆயிற்றாம். தலைநகர் மாற்றம் என்பது புதியதோ, முட்டாள்தனமானதோ அல்ல. ஆனால் அதைச் செய்த முறை மட்டுமே தவறானது அதனால் அரசம் மக்களும் அதிக நஷ்டமடைந்தனர்.

**அடையாள நாணய முறை வெளியீடு**: தோவாப் மீது வரி விதிப்பு தலைநகர் மாற்றம் இவற்றால் மக்களிடம் மதிப்பிழந்திருந்த துக்ளக், மேலும் மதிப்பிழக்க அடையாள நாணய முறைத் திட்டம் வழி வகுத்தது.

பரிசோதனைகள் செய்து பார்ப்பதில் ஆர்வம் கொண்ட துக்ளக், பாரசீக மற்றும் சீன மன்னர்களைப் போன்று, நாணய முறையில் சீர்திருத்தம் செய்ய விரும்பினார். அதற்காக அடையாள நாணய முறையை அவர் புகுத்தினார். போர்களாலும் கலகங்களாலும் காலியாவிட்ட கருவூலத்தை நிரப்ப அவர் செய்த முயற்சியே அது என்றும் சொல்வர்.

1329-30-ல் செப்பு நாணயங்களை அச்சிட்டு, அவற்றை சட்டப் பூர்வமான நாணயங்கள் தங்கம் வெள்ளி நாணயங்களுக்கு ஈடானவை என சுல்தான் அறிவித்தார். இப்பரிசோதனையும் படுதோல்வி கண்டது. நாணயம் அச்சிடுவது அரசின் தனி உரிமையாக்கப்பட்டதால் மக்களும் நாணயங்களை அச்சிட்டுக் கொண்டனர். ஒவ்வொரு இந்துவின் வீடும், நாணய அச்சுக் கூடமாயிற்று" என்றார் பரணி. தங்கம், வெள்ளி, நாணயங்கள் பதுக்கப்பட்டுவிட்டன. புதிய நாணயங்களை அயல் நாட்டு வணிகர்கள் வாங்கவில்லை. இதனால் வாணிகம் ஸ்தம்பித்தது. பொருளாதாரம் சீர்குலைந்தது. பொருளாதாரத்தை சீரமைக்க செப்பு நாணயங்களை திரும்பப் பெற்று அவற்றிற்கு பதிலாக தங்கம், வெள்ளி நாணயங்களை அரசு கொடுத்தது. அதற்காக மீண்டும் கள்ள நாணயங்களை மக்கள் அச்சிட்டனர். அரசுக் கருவூலம் முழுவதும் காலியாயிற்று.

**படையெடுப்புக் கனவுகள்:** உலகின் மன்னராக வேண்டுமென விரும்பிய துக்ளக், டிரான்சாக்கியானா, குராசான், ஈரான் ஆகிய பகுதிகளை வெற்றி கொள்வதற்கான திட்டத்தை தீட்டினார். 375000/- போர் வீரர்கள் கொண்ட படையைத் திரட்டினார். அப்படைக்கு ஓராண்டுக்குரிய ஊதியத்தை முன்னதாக கொடுத்தார். படையெடுப்புக்கான வேறு பல ஏற்பாடுகளையும் செய்தார். ஆனால் உலகை வெற்றி கொள்ள முடியாது என்பதை தாமதமாக உணர்ந்த சுல்தான், முடிவில் அப்படையைக் கலைத்துவிட்டார்.

1337-ல் பஞ்சாபில் கங்கார மாவட்டத்திலுள்ள நாகர்கோட் கோட்டையை வெற்றிகரமாக துக்ளக் கைப்பற்றினார். இமயமலை அடிவாரத்தில் இருந்ததாகக் கருதப்படும் குராஜல் மீது படையெடுக்க பெரும்படையொன்றை 1338-ல் அனுப்பினார். குராஜலை வென்றாலும் பருவ மழையால் ஏராளமான ஆட்சேதமும் பொருட்கள் சேதமும் ஏற்பட்டது.

**மங்கோலியப் படையெடுப்பு:** தமாஷிரின் தலைமையில் வந்த மங்கோலியர், லாகூர் முதல் முல்தான் வரையிலான பகுதிகளை நாசப்படுத்தியதுடன் மக்களுக்கு துன்பம் உண்டாக்கினர். மங்கோலியருக்கு வெகுமதிகள் அளித்து அவர்களுடனான போரை சுல்தான் தவிர்த்தார். இது சுல்தானின் இராணுவத்திற்கு இழுக்கை உண்டாக்கியது.

**சுல்தானின் மரணம்:** குஜராத்தில் தோன்றிய கலகத்தை அடக்க சுல்தான் அங்கு விரைந்தார். கலகம் அடக்கப்படவே, கலகத் தலைவர் தகி, சிந்துவிலுள்ள தட்டாவிற்கு ஓடினார். அவரைப் பின் தொடர்ந்து தட்டா சென்ற சுல்தான் அங்கேயே நோய் வாய்ப்பட்டு கி.பி. 1351-ல் இறந்தார். சுல்தானின் மரணம் பற்றிக் கூறும் போது, மக்களிடமிருந்து மன்னரும், மன்னரிடமிருந்து மக்களும் விடுதலையாயினர்" என்கிறார் பரணி.

**நிர்வாகக் குறைகள்:**

டில்லி சுல்தான்களுள் தனி இடம் வகிக்கும் முகமது பின் துக்ளக் தன் ஆட்சி முறை நடவடிக்கைகளில் தோல்வி கண்டார். அத்தோல்வி ஏன் ஏற்பட்டது என்று அறிவது அவசியம். தோவாப் பகுதி மீது வரி விதித்தது சரியான முடிவே. ஆனால் சுல்தானின் துரதிஷ்டம் வரி விதித்த காலத்தில், பஞ்சம் ஏற்பட்டது. இதனால் விதிக்கப்பட்ட வரி வசூலாகாததுடன் நிவாரண நடவடிக்கைகளுக்காக அதிக தொகை செலவிட வேண்டியதாயிற்று.

தலைநகர் மாற்றுதல் முகமது பின் துக்ளக்கின் மிக புத்திசாலித்தனமான செயல். தன் எண்ணத்தை மக்கள் அப்படியே ஏற்றுக் கொள்வார்கள் என சுல்தான் எதிர்பார்த்தார். அவருடைய எண்ணம் ஈடேறியிருந்தால் தென்னிந்திய நகரமொன்று வரலாற்றில் முதல் முறையாக இந்திய அரசின் தலைநகராகி - யிருக்கும். ஆனாலும் அரசு அலுவலகங்களை மட்டும் அவர் மாற்றி இருக்கலாம். மக்களின் கஷ்டங்களையும் அரசின் நஷ்டங்களையும் கணக்கிட கவனிக்க சுல்தான் மறந்தார். அடையாள நாணய முறையைப் புகுத்துவதன் மூலம் நாணயவரலாற்றில் ஒப்பற்ற இடம் பெற சுல்தான் நினைத்தார். மக்கள் நேர்மையானவர்கள் என்று நினைத்த அவர், கள்ள நாணயங்களை மக்கள் அச்சிடுவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை.

ஆட்சிமுறை நடவடிக்கைகளால் இழந்த பெயரை, படையெடுப்புகள் மூலம் பெறலாம் என நினைத்தார் துக்ளக். ஆனால் படையெடுத்த இடத்தின் புவியியலறிவு, இயற்கைத் தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்ளத் தவறியதால் அதிலும் வெற்றி பெறவில்லை. இவ்வாறு இயற்கையும் மக்களும் அவருக்கெதிராக சதி செய்தனர். அத்துடன் அவருடைய சரியான திட்டமிடாமை, தொலைநோக்கின்மை ஆகியன இணைந்து அவரை தோல்வி அடையச் செய்தன.

**சுல்தானின் குணநலன்கள்:**

வேறு எந்த இந்திய ஆட்சியாளர் பற்றியும் இல்லாத அளவிற்கு துக்ளக்கின் குணநலன்கள் பற்றி மட்டும், வரலாற்றாசிரியர்களும் அறிஞர்களும் வித்தியாசமான கருத்தைக் கொண்டுள்ளனர். கிறுக்கர், இரத்த வெறிபிடித்த கொடுங்கோலர் எனச் சிலரும், அத்தகைய அடைமொழிகள் அவருக்குப் பொருந்தாது. அவர் சிறந்த அறிஞர் எனச் சிலரும் கூறுகின்றனர். இக்கருத்துக்களை ஆராய்வது நல்லது. பல வகைத் திறமைகள் கொண்டிருந்த துக்ளக்கிற்கு இணையான டில்லி சுல்தான்கள் யாருமே இல்லை. பாரசீக மொழி, அரபி மொழியும் இலக்கியமும், இஸ்லாமிய மதக் கோட்பாடுகள், சட்ட திட்டங்கள் உட்பட கல்வி கேள்விகளில் சிறந்திருந்தார். தர்க்கம், தத்துவம், இயற்பியல், வேதியியல், மருத்துவம், கணிதம், வானவியல், ஆகியவற்றையும் அறிந்திருந்த அவரை, "அவர் கால அரிஸ்டாட்டில்" என்பர். வள்ளல் தன்மை, நடுநிலை பிறழாமை, மத நம்பிக்கை ஆகியவற்றிலும் சிறந்திருந்தார். எளிய வாழ்க்கை, அதிக தன்னம்பிக்கை நல்ல சிந்த இவை கொண்டிருந்த அவரிடம் எந்த கெட்ட பழக்கமும் இல்லை.

இத்தகைய சிறந்த குணநலன்கள் கொண்டிருந்த அவரை கிறுக்கர் என்றோ, மாறுபட்ட குணங்களைக் கொண்டவர் என்றோ, இப்ன் பதூதா தவிர எந்த வரலாற்றாசிரியரும் குறிப்பிடவில்லை. மேம்போக்காகப் பார்க்கும் போது எந்த மனிதனும் மாறுபட்ட குணங்களைக் கொண்டவனாகத் தான் தோன்றும் ஆனால் ஆராய்ந்தே தீர்ப்பளிக்க வேண்டும்.

நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கும் போது மனிதாபிமானத்துடன் சுல்தான் இருப்பார். அளிக்கப்பட்ட தீர்ப்பில் உள்ள தண்டனையை நிறைவேற்றுவதில் கட்டாயமாக இருப்பார். மனித இனத்தை அழிக்க வேண்டும். யாரையும் பயமுறுத்த வேண்டும் என்பதற்காக குரூரமாகவோ, கொடூரமாகவோ, அவர் நடந்து கொள்ளவில்லை. அவரது ஆட்சிமுறை நடவடிக்கைகளும் நீங்கானவை பிறரை புண்படுத்தியவை என்று கூற முடியாது.

ஆனாலும் சபல புத்தி, எதையும் விரைந்து செய்யாமை, தன் கருத்துக்களே சரி என்ற பிடிவாதம், மிதமிஞ்சிய தன்னம்பிக்கை முதலிய தீய குணங்கள் மட்டும் அவரிடமிருந்தன. இதற்காக மட்டும் அவரை குறைகூடுவது சரியல்ல. குணநலன்களுக்கும், சாதிக்கும் மனப்பான்மைக்காகவும் மறக்க முடியாத நபர் முகமது பின் துக்ளக்.

## 2. Timur Invasion

### தைமூர்ப் படையெடுப்பு

சாமர்கண்டிற்குத் தெற்கே 50 மைல் தொலைவில் அமைந்துள்ள தேஷ் என்னுமிடத்தில் கி.பி.1334ல் பிறந்தவர் தைமூர். அமீர் தைமூர் அல்லது தைமூரிலங் என அழைக்கப்பட்டார். இப்பெயரின் பொருள் நொண்டி என்பதாகும். இவருடைய தந்தை அமீர் துர்க்காய் ஆவார். துருக்கிய உயர்குடியில் பர்லாக்களின் குர்கான் பிரிவின் தலைவராக அவர் விளங்கினார். தைமூர் தம் 33வது வயதில் சக்தைத் துருக்கியர்களின் தலைவரானார். பராசீகம், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை வென்று அவற்றைத் தம் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தார். இந்தியாவின் மீது படையெடுப்பதற்கு முன்னரே மெசபடோமியா, ஆப்கானித்தானம் ஆகியவற்றையும் வென்றார்.

### இந்தியப் படையெடுப்பு

தைமூரின் இந்தியப் படையெடுப்பிற்கான காரணங்களைச் சுட்டிக்காட்டிய முகம்மது அபீப் கூறும் காரணங்கள் இவை. தைமூரின் அதிகாரத்திற்கு அறைகூவல் விடக்கூடிய பெரிய ஆட்சிப்பரப்பு இல்லாததால் மாவட்டங்களில் இருந்த போர்த் தலைவர்களை ஒருவர்பின் ஒருவராகத் தோற்கடித்தார். எனவே அவர்கள் மீண்டும் ஒன்று சேர வாய்ப்பு ஏதும் இல்லை. படைவீரர்கள் கிடைத்தனர். மிக உயர்ந்த தரம் வாய்ந்த போர்வீரர்களின் அதிக எண்ணிக்கையில் கிடைத்தனர். செங்கிஸ்கானால் வீரம் மிக்கப் போர்வீரர்களாக உருவாக்கப் பெற்றவர்களும், அவர்களுடைய வாரிசுகளும் மறைந்துவிட்டனர். எஞ்சியவர்களோ தொழில் முறைப் போர் வீரர்களாயினர். இதனால் எவ்வளவு படைவீரர்கள் தேவையோ, எத்தனை நாளைக்குத் தேவையோ அவ்வளவு படைவீரர்கள் எளிதாகக் கூலிக்குக் கிடைத்தனர். செங்கிஸ்கான் அமைதியான நகரங்களைத் தாக்கி கொள்ளையடிக்கும் மரபினை ஏற்படுத்தியிருந்தார். செங்கிஸ்கான் காட்டிய வழியில் அதனைத் தைமூரும் தொடர்ந்து பின்பற்றினார்.

### தனிப்பட்ட இயல்புகள்

தைமூரின் தனிப்பட்ட இயல்புகளும் படையெடுப்பிற்குக் காரணமாக விளங்கின. தைமூர் தாம் பெற்ற அனுபவங்களின் வாயிலாகப் பயிற்சி பெற்றவரானார். அவரிடம் மிகச்சிறப்பு வாய்ந்த நிருவாக, போர்த்திறன்கள் குவிந்து கிடந்தன. அது மட்டுமல்லாது எதையும் சரியாகக் கணிப்பதில் வல்லவராய் விளங்கினார். அறிவியல் கண்டுபிடிப்புகளைத் தக்க வகையில் பயன்படுத்தவும் கற்றிருந்தார். தம்மைப் பின்பற்றுகின்றவர்களுக்குப் பரிசுகள் மற்றும் தண்டனை வழங்கித் தம் கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தார். மிகவும் துணிச்சல் வாய்ந்த அவர் எச்சரிக்கையுடன் செயல்படும் திறன் வாய்ந்தவராகவும் விளங்கினார்.

**உண்மைக் காரணம்**

இந்தியப் படையெடுப்பிற்கான உண்மைக் காரணங்கள் யாவை? என ஆராய்கின்றபோது தெளிவான காரணம் எதனையும் சுட்டிக்காட்டிட இயலவில்லை. அவர் ஒரு சிறந்த போர்வீரர். அரசுகளைக் கைக்கொள்வதில் பேரார்வமிக்கவர். எனவே அத்தகைய ஆர்வமே அவரை இந்தியாவின் மீது படை நடத்தவும், தூண்டுதலாய் விளங்கியிருக்கக்கூடும் என்பது கே.எஸ்.லாலின் கருத்து.

டாக்டர். கே.எஸ்.லால் சமயக் காரணமே இந்திப் படையெடுப்புக்கு அடிப்படை என்பதை ஏற்கவில்லை. அவர் சிலை உடைப்பாளர் அல்லர், எனவும் கோவில்களை அழிப்பதில் தீவிரக்கவனம் செலுத்தவில்லை எனவும் கூறுகிறார். அவருடைய படையில் இருந்த துருக்கியர்கள் சிலை வணங்கத்தவர்கள், பராசீகர்களே தீயை வழிப்பட்டவர்கள், தைமூரின் படையெடுப்பினால் இந்துக்கள் எந்த அளவிற்குப் பாதிப்பிற்குள்ளாயினரோ அந்த அளவிற்கு இந்தியாவிலிருந்த இசுலாமியரும் குருதியும், கண்ணீ ரும் சிந்தினர்.

மைய ஆசியாவை மாஸ்கோ வரை வென்ற எந்தப் படையெடுப்பாளரும், உலகை வெற்றி கொள்ள வேண்டும் என்ற பேரவா உடையவர் எவரும் அடுத்து திரும்புவது கிழக்கு நோக்கியே என்று லால் கூறுகிறார். பாக்தாத்தைக் கைப்பற்றியதும் மேற்கிற்கு மிக அருகில் நெருங்கிவிட்டார். பயாசித்துக்கள் துர்க்கோமன்களாலும், சிரியன் அராபியர்களாலும் உதவி பெற்று மேற்கு நோக்கி நகர்வதைத் தடைசெய்தனர். எனவே கிழக்கில் அவருடைய பேரன் உதவி கேட்டு விடுத்த வேண்டுகோளை ஏற்றுத் தம் படையெடுப்பை மேற்கொண்டார்.

தமது பேரரான பதினைந்து வயதுச் சிறுவனுக்கு குண்டூஸ், பாகியான், காபூல், கஜினி, காந்தார் ஆகிய மாநிலங்களை அளித்திருந்தார். அவரை மேலும் இந்தியா நோக்கி முன்னேறப் பணித்தார். 1327-ல் சிந்துவைக் கடந்து உச்சா நகரத்தைக் கைப்பற்றினார். ஆனால் முல்தானத்தில் பின்னடைவு ஏற்பட்டது எனவே உடனடியாக அவருடைய உதவிக்குச் செல்ல வேண்டியதாயிற்று. இதுவே இந்தியப் படையெடுப்பை மேற்கொண்டதற்கான உடனடிச் சரியான காரணமாகும் என்று லால் கூறுகிறார்.

மால்புசர் - இ-தைமூரி சாபர்நாமா அல்லது மால்புசாட்-இ-தைமூரி என்னும் நூலில் அவருடைய படையெடுப்பிற்கான தலையாய காரணம் படையெடுப்போ அல்லது கொள்ளையிடலே அன்று என்று குறிப்பிடப் பட்டுள்ளது. போர்வீரர்கள், உலேமாக்களின் கூட்டத்தைக் கூட்டி அவர்களுடைய கருத்துரைக் கேட்டபோது, ஷா உருக் என்பவர் இந்தியாவின் விரிந்த பரப்பையும் அதன் பயனையும் சுட்டிக் காட்டிப் படையெடுக்கச் சொன்னார். இளவரசர் முகம்மது இந்தியாவின் செல்வ வளம், கனிவளம், உலோகங்கள், முத்துக்கள் ஆகியவை ஏராளமாய் உள்ளதைச் சுட்டிக்காட்டினார் என்பர். அவர் சமய நோக்கினையும் சுட்டினாராம். சில உயர்குடியினர் இந்தியாவில் தங்குவதால் ஏற்படும் தீமைகளையும் சுட்டிக்காட்டினராம்.

**சமயக்காரணம்**

இவ்வாறான பலருடைய கருத்துரைகளையும் கேட்டப்பின் தாம் படையெடுக்கப் போவதற்கான காரணம் யாது என்பதைத் தைமூர் விளக்கினார். சிலை வழிபாடு செய்பவர்களுக்கு எதிராகப் படையெடுப்பதே தம் நோக்கம் எனவும், முகம்மதுவின் சட்டப்படி அந்நாட்டு மக்களை உண்மைச் சமயத்திற்கு மாற்ற வேண்டும் எனவும், பல கடவுள் வணக்க

இழிவு நிலையை இந்தியாவில் மாற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அவர்களுடைய கோவில்களை இடித்துச் சிலைகளைத் தூக்கி எறிவதன் வாயிலாக இறைவன் முன் காஜி அல்லது முஜாஹித் ஆக முடியும் என்னும் குறிப்பிட்டார். அவருடைய இந்தக் கருத்தை முசுலிம் சமய ஞானிகளும் ஏற்றுக்கொண்டனர்.

**பிரோஸ் துக்ளக்கின் வாரிசுகள்**

மற்றொரு காரணம் பிரோஸ் துக்ளக்கின் வாரிசுகளின் திறமையற்ற ஆட்சியாகும். இந்தியாவின் நிலை மோசமானதாக இருந்தது என்னும் தகவல் கிடைத்தது. முல்தானத்திலும் டெல்லியிலும் உடன் பிறப்புகளான சாரங்கானும்மல்லூ கானும் அதிகாரம் செலுத்தினர். இந்தியாவின் செல்வவளமும் ஒரு காரணமாயிற்று. கொள்ளையே நோக்கம்

தைமூர் கொள்ளைக்காரர் எனவும் அவருக்கு சமய நோக்கத்தைவிடக் கொள்ளையே பிரதான நோக்கம் என்பது அபீப்பின் கருத்து. சையதுக்களும் செல்வச்சிறப்புடன் இருந்தனர். எனவே கொள்ளையே தைமூரின் நோக்கம் என்கிறார்.

**படையெடுப்பு**

இந்திய படையெடுப்புக்கு முன் தைமூர் கியாசுத்தீன் ஜஹாங்கீரின் மகனும், தம் பேரனுமான பீர்முகம்மதுவை அனுப்பி வைத்தார். பீர் முகம்மது சிந்துவைக் கடந்து ஆறுமாத முற்றுக்கைக்குப்பின் உச்சாவைக் கைப்பற்றி, திபல்பூரை வென்று, பாக்பதானையும் வென்று சட்லெஜ் அடைந்து தைமூருக்காகக் காத்திருந்தார்.

1398-ல் சாமர்கண்டை விட்டுப் புறப்பட்டார். காபூல் வழியாகச் சிந்துவைக் கடந்து ஜீலம் அடைந்தார். ஷிகாபுத்தீன் முபாரக் ஷாவைத் தோற்கடித்து அவர் குடும்பத்தையே அழித்தார். பின்னர் ஜீலம் நதியைக் கடந்து லாகூரில் ஜஸ்ரத்தை வென்று சட்லெஜை அடைந்தார். பீர்முகம்மது அவருடன் இணைந்தார்.

பீர்முகம்மதுவை எதிர்த்த பாக்பட்டன் மக்கள் கொலை செய்யப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டு அடிமைகள் ஆயினர். பட்டி இராஜபுத்திரர் இராய்துல் சந்து எதிர்த்த நின்று பின் சரணடைந்தார். இந்நகரமும் அழித்தொழிக்கப்பட்டது. இந்துக்கள் தங்களின் பெண்டிர், செல்வம், பிள்ளைகளை நெருப்பிலிட்டுக் கொன்றனர். 10,000 இந்துக்கள் இவ்வாறு அழிந்தனர்.

தைமூர் பட்னீரை விட்டு நீங்கி சிர்சா , பதேஹாபாத் வழியாக வழியெங்கும் படுகொலை நிகழ்த்திச் சென்றார். தோ ஹானாவில் 2000 ஜாட்டுகள் கொல்லப்பட்டனர்.

டிசம்பர் 1398-ல் தைமூரின் வலதுபகுதிப் படை டெல்லிக்கு வடக்கே யமுனாவிற்கு எதிரே அடைந்தது. அங்கு லோனியைக் கைப்பற்றி அதன் இந்துக்களைப் படுகொலை செய்தார்.

நாசிருத்தீன் மகமதுவும், மல்லூ இக்பாலும் தைமூரின் பின்பகுதிப் படையைத் தாக்கியபோதே தைமூர் மேலும் படையை அனுப்பி மல்லூ இக்பாலைத் தோற்கடித்து டெல்லியை நோக்கி ஓடச் செய்தார். மல்லூவின் தாக்குதலின் போதே, தாக்குதலை கண்டு மகிழ்ந்த ஒருலட்சம் இந்துக்களைப் படுகொலை செய்தார்.

தைமூர் பின் யமுனையைக் கடந்த டெல்லியைத் தாக்க முடிவு செய்தார். டிசம்பர் 17, 1398-ல் நடைபெற்ற இத்தாக்குதலில் இந்தியப்படை 10,000 குதிரைகள், 40,000 காலாட்படைகளுடனும், 120 யானைகளுடனும் தைமூரைச் சந்தித்தது.

தைமூரின் வலது பிரிவுக்கும் பீர் முகம்மது, அமீர்யாத்கார் பர்லாஸ் தலைமை வகித்தனர். இடது பிரிவுக்குச் சுல்தான் ஹுசையன், இளவரசன் கலீல், அமீர் ஜஹான் தலைமை தாங்கினர். இருபடைகளும் டெல்லிக்கு வெளியே போரிட்டன.

மல்லூ இக்பாலும், மகமது ஷாவும் போர்களத்திலிருந்து ஓடினர். சையதுகள், காஜிகள், ஷேக்குகள், உலேமாக்கள் ஆகியோர் தைமூரை வரவேற்றனர். டெல்லி மக்களுக்கு மன்னிப்பு வழங்கினார். எண்ணிறிந்தவர்களைத் கைது செய்து அடிமைகளாக்கினார். பதினைந்து நாட்களில் சிரி, பழைய டெல்லி, ஜகன்பனா ஆகியவற்றைக் கைப்பற்றினார்.

டெல்லியிலிருந்து மீரத் சென்றார். அதனை வீரத்துடன் காத்தவர் இலியாஸ் ஆப்கன் ஆவார். இங்கும் அதனை அழித்து, இந்துக்கள் வீடுகளைத் தீயிட்டு அழித்தார். கங்கைக்குச் சென்று கரையில் போர் நிகழ்த்தி 48 படகில் இருந்து இந்துக்களைக் கொன்று முபாரக்கான் தலைமையில் வந்த 1,00,000 படையினரை வென்றார். அரித்துவராத்தில் இருந்து இந்துப்படையை வென்றார். ஆடுகளைப் போல இந்துக்கள் பலியிடப்பட்டனர். ஜனவரி 16,1399ல் கால்ராவைக் கைப்பற்றினார். அதன்பின் யமுனையை அடைந்து அதன் அரசரைத் தோற்கடித்தார்.

தாம் ஊர் திரும்புமுன் லாகூர், முல்தானம், திபல்பூர் ஆகியவற்றின் அரசுக்குத் தலைவராக கிசிர்கானை நியமித்தார். மார்ச் 19,1399ல் சிந்துவைக் கடந்து சாமர்கண்டு அடைந்தார். ஒரே படையெடுப்பில் இவ்வளவு சேதம் விளைவித்துச் சென்ற படையெடுப்பாளர் எவரும் இல்லை.

**படையெடுப்பின் விளைவுகள்:**

1. தைமூரின் படையெடுப்பிற்குப்பின் வட இந்தியா ஒழுங்கின்றிக் குழப்ப நிலையை அடைந்தது. டெல்லி அழிந்தது. மக்கள் இல்லா ஊராய் மாறியது. அதற்குத் தலைவர் இல்லை. அங்கு எஞ்சிய மக்களும் பஞ்சம் நோயினால் வருந்தினர். இறந்த உடல்களால் சுற்றுப்புறச்சூழலே பாதிப்பிற்குள்ளாயிற்று.
2. துக்ளக் பேரரசு முடிவிற்கு வந்தது. ஜான்பூரின் சுதந்திர அரசராக குவாஜா ஜகான் விளங்கினார். முசாபர் ஷா குஜராத்தில் தனி அரசோச்சினார். மாளவத்தில் திலாவர்கானும் அரசோச்சினார். பஞ்சாப்பும், மேல் சிந்துவும் கிசிர்கானால் ஆளப்பட்டன. நஸ்ரத்ஷா சிறிது காலம் டெல்லி அரசராக விளங்கினார். பின்னர் அவரும் விரட்டப்பட்டு மல்லூ அரசரானார். துக்ளக் அரசு மறைந்து சையது மரபு 1414 முதல் ஆளத்தலைப்பட்டது.
3. இந்தியாவின் செல்வம் தேய்ந்தது. மாபெரும் மாளிகைகள், டெல்லி, பட்னீர், திபல்பூர், மீரட், ஹரித்துவார் ஆகிய இடங்களில் இருந்தவை அழிந்தன.
4. இந்துக்களுக்கும், முசுலிம்களுக்கும் இடையேயான பிளவு அதிகரித்தது. இந்துக்கள் முசுலிம்களை மிலேச்சர்கள் என்று கருதினர். இந்துக்களை அழித்ததும், அவர்கள்

மண்டையோடுகளைக் கொண்ட கோபுரம் அமைத்ததும் இந்துக்களின் ஆத்திரத்தை, வெறுப்பை அதிகரித்தது. இரண்டு பிரிவினரும் ஒன்று சேரா நிலையை உருவாக்கியது.

5. இந்தியக் கலை மத்திய ஆசியாவிற்குப் பரவியது. இந்தியாவிலிருந்து ஏராளமான கலைஞர்கள், கைவினைஞர்கள் கொண்டுசெல்லப்பட்டு சமார்கண்டில் மசூதிகள், மாளிகைகள் அமைத்தனர்.
6. முகலாயர் படையெடுப்பிற்கு முன்னோடியாக விளங்கியது. தைமூரின் வாரிசாகப் பாபர் உரிமை கொண்டாடினார்.
7. இது ஒரு இலக்கில்லாத படையெடுப்பு என்று கே.எஸ்.லால் கூறுகிறார். தோற்றவர் எல்லாம் இழந்தார். ஆனால் வென்றவர் பெற்றதோ ஒன்றுமில்லை.

## 3. Lodi Dynasty – Sikander Lodi – Ibrahim Lodi

**லோடி மரபு (1451-1526)**

பஹ்லோல் லோடியின் தலைமையில் ஏற்பட்ட புதிய ஆப்கானிய மரபு லோடி மரபு என்பதாகும். இந்தியாவில் முதல் ஆப்கானிய அரசு இதுவாகும். பஹ்லோல் லோடி இவரால் தொடங்கப்பட்ட லோடி மரபு 1451லிருந்து 1526வரை நீடித்தது. பிரேஷ் துக்ளக்கின் காலத்தில் பஹ்லோலின் முன்னோர்கள் இந்தியா வந்தனர். சைய்யிதுகளின் காலத்தில் சாமர்கண்டின் ஆளுநராக விளங்கினர். 1451 ஏப்ரல் 19ல் அகம்மதுகான் என்பவரின் உதவியால் சுல்தானாகப் பதியேற்றப்பின் அகமதுவைச் சிறையில் வைத்தார். தம் நிலையைப் பலப்படுத்தப் படைவீரர்களுக்கு பஹ்லோல் அன்பளிப்புகள் வழங்கினார். பதவி உயர்வு அளிப்பதாக ஆசை காட்டித் தம் பக்கம் சேர்த்தார்.

பஹ்லோலை எதிர்த்த ஜான்பூர் அரசர் முகமது ஷார்க்கி தோல்வியடைந்தார். இதைக் கண்ட மற்ற எதிரிகளும் நடுங்கினர். முல்தானம், ஜான்பூருக்கு எதிராகப் படை நடத்தினார். டெல்லிப்பேரரசின் வீழ்ச்சியைச் சிறிது காலம் தள்ளிவிடச் செய்தவர் பஹ்லோல் லோடி. இவர் சமமானவர்களின் முதன்மையானவராக விளங்கினார். தம்மை உயர்ந்தவராக அவர் கருதிக்கொள்ளவில்லை.

**சிக்கந்தர் லோடி**

பஹ்லோலின் மறைவிற்குப் பின் அவர் மகன் நிஜாம்கான், சிக்கந்தர் ஷா என்னும் பெயரோடு அரியனை ஏறினார். உயர்குடியினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் தந்தையை போலவே டெல்லியின் பெருமையைக் காத்திடப் பல போர்களைச் செய்யவேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டன. ரேபாரி ஆளுநர் ஆலம்கானின் தம்பி பார்பக்கை வென்று ஜான்பூரைக் கைப்பற்றியதோடு, பார்ப்க்கை அதன் சிற்றரசராக்கித் திறை செலுத்தச் செய்தார். அங்கிருந்து கல்வி, குவாலியர், பயானா, ஆக்ரா ஆகியவற்றின் தலைவர்களையும் அடிபணியச்செய்து டெல்லிக்குத் திரும்பினார்.

**கிளர்ச்சிகள்:** ஜான்பூரில் இந்துக்கள் கிளர்ச்சி செய்தனர். இக்கிளர்ச்சிக்குப் பார்பஷாவிற்கும் தொடர்பு இருப்பதாகக் கேள்விப்பட்டு அவரைக் கைது செய்தார். சூனாரில் ஹுசைன் ஷாவின் உயர்குடியினரைத் தோல்வியுறச் செய்தார். ஆனால் சூனாரைக் கைப்பற்ற முடியவில்லை. ஹுசைன் ஷா 100 யானைகளுடனும், இலட்சக்கணக்கான குதிரைகளுடனும்

போரிட்டுத் தோல்வியடைந்ததால் தலைமறைவாக வாழ்ந்த அவருக்கு வங்க ஆட்சியாளர் அடைக்கலம் அளித்தார்.

**வங்க எதிர்ப்பு:** வங்க அரசரை எதிர்த்திடச் சிக்கந்தர் மகனை அனுப்பினார். இருவரும் போரினால் பயனில்லை எனக் கருதினர். வங்க அரசர் சிக்கந்தரின் எதிரிகளுக்கு உதவுவதில்லை என்று உடன்பாடு செய்து கொண்டார். சிறிது காலம் பஞ்சாபில் சிக்கந்தர் லோடியின் படை தங்கியிருந்தது. பஞ்சாபில் பஞ்சம் தோன்றவே ஜான்பூர் சென்று டெல்லி திரும்பியது. பஞ்சாப் முழுவதும் சிக்கந்தர் வசமாயிற்று. டிர்கட், சரன் ஆகிய நாடுகளைக் கைப்பற்றி ஆப்கானிய ஆளுநர்களை நியமித்தால் ஆப்கானிய உயர்குடியினரின் கணக்கைத் தணிக்கை செய்ய ஆணையிட்டவுடன் அவர்கள் கிளர்ச்சி செய்தனர். அக்கிளர்ச்சியை ஒடுக்கிய அவர்கள் ஒற்றர்களால் கண்காணிக்கப்பட்டதோடு பர்மன்கள் என்னும் கட்டளைகளை மேற்கொள்ள வற்புறுத்தப்பட்டனர்.

**ஆக்ராவின் தோற்றம்:** எடாவா, பயானா, கோயில், குவாலியர், தோல்பூர் ஆகிய பகுதிகளில் குடியிருந்த நிலவுரிமையாளர்கள் மீது தனிக் கட்டுப்பாடு செலுத்தும் பொருட்டே 1504ல் ஆக்ராவைத் தோற்றுவித்ததோடு தம் இருப்பிடமான டெல்லியை விட்டு ஆக்ராவிற்கு மாற்றிக்கொண்டார்.

**நார்வார்:** மாளவத்துடனிருந்த நார்வார் சிக்கந்தரின் படையெடுப்பின்போது குவாலியரின் கீழ் இருந்தது. பஞ்சமும், பட்டினியுமாக இருந்த நார்வர் சரணடைந்தது. இங்கிருந்த இந்து ஆலயங்களை அழித்து அவற்றின் மேல் மசூதிகளை எழுப்பினார். சாந்தேரி அரசரும் சிக்கந்தருக்குக் கட்டுப்பட்டார்.

**தோல்பூர்:** தோல்பூர் வீழ்ச்சியடைந்ததேயன்றிப் பணியவில்லை. அதன் அரசர் இராஜாமான் சுயேச்சையாக இருந்தார். 1517ல் சிக்கந்தர் இறந்தார்.

**ஆட்சி அமைப்பு:** சிக்கந்தர் போரில் தொடர்ந்து ஈடுபட்டிருந்தாலும், நாட்டின் மேல் கவனம் செலுத்தினார். சிறந்த ஒற்றர்படை வைத்து நாட்டு நடப்புகளைக் கண்டறிந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். உயர்குடியினரின் கணக்குகளைத் தணிக்கை செய்யப் பணித்தார். ஏழைகளுக்கு நல்ல பலத்திட்டங்களும், வேளாண்மையைப் பெருக்கப் பல வசதிகள் செய்ததோடு, தானியங்கள் மீது விதிக்கப்பட்ட வரியையும் நீக்கினார். வணிகர்களை ஊக்குவித்தார்.

ஏழைகளுக்கு ஆறுமாதத்திற்கு வேண்டிய உணவு அளித்தார். சில முக்கிய நாளில் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். கற்றவர்கள் அரசனால் ஆதரிக்கப்பட்டதால் மியான்புவா என்பவர் வடமொழி மருத்துவ நூலினைப் பராசீக மொழியில் மொழி பெயர்த்தார். தரீக்கிதாவூத் என்னும் நூலின் வாயிலாக அரசன் நாட்டின் வழக்கங்களுக்கு மாறாக நடக்கவில்லையெனத் தெரிகிறது. மியான் தஹிர் என்ற கலை வல்லுநரை ஆதரித்தார். ஆனால் இந்துக்களின் மனம் நோகச் செய்தார். இந்து ஆலயங்களை அழித்து அதன்மேல் மசூதி எழுப்பியதோடு, இந்துக் கடவுளரின் வடிவங்களை எடைக்கற்களாக மாமிசம் விற்போரைப் பயன்படுத்தச் செய்தார். இந்துக்களை யமுனையில் குளிக்கத் தடை விதித்தார். இந்துக்கள் விருப்பப்படி முடிதிருத்தக்கூட தடை செய்தார்.

பராசீக மொழியில் தேறியிருந்த இவர் குருகி என்ற புனை பெயரில் கவிதைகள் இயற்றியுள்ளார். கற்றறிந்தவர்களை ஆதரித்ததோடு அவர்களுக்கு மத்தியில் தான் இருப்பதே தனக்குச் சிறப்பாகக் கருதினர். பேராசையும், கருமித்தனமும் அவரிடம் இல்லை . இசுலாமிய அரசர்களுள் சிறந்தவராகக் கருதப்பட்டார். ஆனால் இந்துக்களின் வெறுப்பைச் சம்பாதித்தார்.

**<u>இப்ராஹிம்லோடி</u>**

இப்ராஹிம் ஆட்சிக்கு வந்தபின் ஆப்கானிய அரசின் போக்கில் மாறுதல் ஏற்பட்டது. பஹ்லோல் இணையாக நடத்தப்பட்ட உயர்குடியினரை கைகட்டி, வாய்பொத்தி அரசரின் ஆணைக்குக் கட்டுப்பட்ட நிலைக்குக் கொண்டு வந்தார். அரசனை உயர்குடியினர் தங்களுக்குச் சமமானவன் என்றெண்ணி வந்த வேளையில் அவர்களின் உரிமையினைத் தலைக்கனம், ஆணவம், மமதையும் கொண்ட இப்ராயிம் அடக்கினார். பேரரசாக இருந்த போதிலும் எதிர்காலம் உணர்ந்து செயல்படும் தன்மையோ, திறமையோ இப்ராஹிமிடம் இல்லை. உயர்குடியினரையும் மதிக்காதால் அவர்களும் இப்ராஹிம் மீது வெறுப்புக் கொண்டிருந்தனர். இதனால் கிளர்ச்சி ஏற்பட்டது.

**ஜாலாலின் கிளர்ச்சி:** அரசனுக்கு எதிராக உயர்குடியினர் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இப்ராஹிமின் சகோதரர் ஜலாலை ஜான்பூர் அரியணையில் இருத்தச் சதிகாரர்கள் முயன்றனர். ஜலால் பொறுப்பேற்றதை விரும்பாத சிக்கந்தரின் உயர்குடியினரில் ஒருவனான கான்ஜஹான் லோடி ஜலாலை ஆதரித்து மற்ற உயர்குடியினரைக் கண்டித்தார். அவர்கள் தவறை உணர்ந்த சைபத்கான் என்பரை அனுப்பி ஜலாலைப் பின்வாங்குப்படிச் செய்தனர். ஆனால் ஜலால் ஏற்கவில்லை.

இப்ராஹிம் ஜலாலுக்கு யாரும் உதவிடக்கூடாது என்றும், அவன் தனது போட்டியாளன் என்றும் ஆணையிட்டிருந்தார். ஆனால் சுல்தானின் மேல் ஆத்திரம் கொண்டிருந்த ஆஸம் ஹுமாயூன் ஜலாலுக்குதவினார். ஜலாலைக் கொலைச்செய்ய இப்ராயிம் ஆணையிட ஜலால் குவாலியர் அரசரிடம் சரண் அடைய, குவாலியர் கைப்பற்றப்பட்டது. கோண்டு வானாவைச் சேர்ந்த ஜமீன்தார்கள் ஜலாலைச் கைது செய்து வைக்க, அரசரின் ஆணைப்படி ஜலால் வழியில் கொல்லப்பட்டார்.

குவாலியரிலிருந்த பிற உயர்குடியினரும், ஆஸம் ஹுமாயூனும், அவருடைய மகனும் சிறையிலடைக்கப்பட்டனர். ஆஸம் அவமானப்படுத்தப்பட்டதைக் கேள்விப்பட்ட மற்ற உயர் குடியினரும், பஹ்லோல் காலத்தில் ஒத்துழைத்தவர்களும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். பெரும்படை திரட்டிய அவர்களை ஷேக் இராஜ் புகார் அமைதிப்படுத்தினார். அவர்களது கோரிக்கையான ஆஸமை விடுதலை செய்ய அரசன் உடன்படாததால் பெரும்போர் நடைபெற்றது. ஆனால் இப்ராஹிம் நடவடிக்கைகள் எடுப்பதையும் வெறுத்தனர். பீகார், காஜிபூர், அயோத்தி ஆகிய பகுதிகளின் படைகள் ஒன்று சேர்ந்தமையால் உயர்குடியினர் தோற்றனர். இப்போருக்குப்பின் தன் தந்தையின் முக்கிய ஆலோசகரான மியான்புவாவை இப்ராஹிம் சிறையில் அடைத்தார்.

**மேவார்ப்போர்:** மேவாரின் தலைவராக இராணாசங்கா என்ற இராசபுத்திரரிருந்தார் இராணாசங்காவிற்கும், இப்ராஹிம் லோடிக்கும் இடையே போர் நடைபெற்றதாகவும், அதில் இராணாசங்கா தோற்றதாகவும் தரீக்கி சலாடினி ஆப்கானா என்ற நூல் குறிப்பிடுகிறது.

ஆனால் பதாவுனி, பெரிஷ்டா ஆகிய வரலாற்றறிஞர்கள் இதுபற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. உயர்குடியினர் மியான்புவா, ஆஸம் ஹுமாயூன் அகியோருக்கு ஏற்பட்ட நிலையை எண்ணிப் பார்த்தனர். தங்களுக்கு எதிராக இப்ராஹிமிடம் அனுப்பி வைக்கப்பட்டபோது அரசரின் ஆணையை மீறி நடந்தவர்களுக்கு நடந்த கதியைப் பார்த்துப் பயந்து தௌலத்கானின் மகன் தப்பித் தன் தந்தை தௌலத் கானிடம் கூறினார். உடனே திலாவர்கானைக் காபூலுக்கு அனுப்பி பாபரை இந்தியாவின் மீது போர்தொடுக்க அழைப்பு விடுத்தார். இக்கட்டான நிலையிலிருந்து பாபர் இவ்வரிய அழைப்பை ஏற்றார். தௌலத்கானின் அழைப்பே முகலாயப் பேரரசு இந்தியாவில் வேரூன்றக் காரணமாய் அமைந்தது.

**இப்ராயிம்லோடியும் பாபரும்**: 1526ஆம் ஆண்டில் டெல்லிக்கருகேயுள்ள பானிப்பட்டு என்னுமிடத்தில் பாபரும் இப்ராஹிம் லோடியும் போரில் ஈடுபட்டனர். இப்போரே முதலாம் பானிபட் போர் எனப் பெயர் பெற்றது. இப்ராஹிம் பெரும் படையைக் கொண்டிருந்த போதிலும் கட்டுப்பாடு நிறைந்த பாபரின் படைகளுக்கு முன்னால் தோற்றுப் போனது. இப்போர் இந்தியாவின் வரலாற்றில் திருப்புமுனையில் ஒன்றாக அமைந்தது. மதிப்பீடு: லோடி மரபின் வீழ்ச்சிக்குக் காரணமாக விளங்கிய இப்ராஹிமிடம் புத்திசாதுரியமும், வீரமும், ஆற்றலும், மிக விரைவில் எதிரிகளை நண்பர்களாக்கும் பண்புமிருந்தன. இசைஞானம் மிக்கவர். இவரின் சில தவறுகளே இவரது வீழ்ச்சிக்குக் காரணங்களாயின. சிறந்த வீரராக விளங்கிய இவர் சிறந்த தளபதியாக விளங்கவில்லை. எனவே படையெடுப்பாளர்களை எதிர்த்து வென்றிடும் ஆற்றலுமில்லை.

## 4. Administration of Delhi Sultanate:

**டெல்லிச் சுல்தானியர்களின் நிர்வாகம்**

**மைய அரசு**

குத்புத்தீன் ஐபெக்கினால் தோற்றுவிக்கப்பட்ட அடிமை மரபு என்று அழைக்கப்பட்ட டில்லிச் சுல்தானிய அரசு முழுமையாகத் தொண்ணூறு ஆண்டுகள் ஆட்சிப்பீடத்தில் இருந்தது. அவர்களுக்குப்பின் கில்ஜிகள் காலத்தில் அதன் பரப்பு இன்னும் விரிவுற்றது. கில்ஜிகள் ஆட்சி முப்பதாண்டுகள் நீடித்தது. கில்ஜிகளுக்குப்பின் துக்ளக்குகள் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்காலம் ஆண்டனர். அவர்களுக்குப்பின் தைமூரின் படையெடுப்பினால் வீழ்ந்தது. டெல்லிச் சுல்தானிய அரசு தோன்றி நின்று அழிவுற்ற இருநூறு ஆண்டுக்காலத்தில் ஒழுங்கான ஆட்சிமுறையை நிறுவப் பல முயற்சிகள் நடைபெற்றன. அவையாவும் செம்மையற்றனவாயும், பண்படாத முயற்சிகளாகவுமே இருந்தன.

**மன்னர் நிலை**

டெல்லிச் சுல்தானிய அரசில் மன்னர் ஒரு யதேச்சதிகாரியாக இருந்தார். தாம் பெற்ற வெற்றியின் வாயிலாகவோ அல்லது மரபு வழி பெற்ற ஓர் உரிமை காரணமாகவோ இந்திய ஆட்சியைத் தாம் பெற்றதாகக் கருதினார். தம்மால் வெல்லப்பட்ட நாடுகளின் மீது தமக்கு மரபு வழிப் பெற்ற உரிமை உள்ளது என்றும், ஆளுவதற்குக் கலீபாவின் ஒப்புதலைப் பெற்றவர் என்றும் தம்மைக் கூறிக்கொண்டார்.

டெல்லிச் சுல்தானிய அரசர் தம்மால் ஆளப்பெற்ற மக்களுக்கு இருவகையில் தோற்றம் அளித்தார். இசுலாமிய மக்களுக்குச் சமயக் காவலராயும், சமய விசுவாசங்களில் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வராயும் விளங்கினார். ஆனால் முசுலிம் அல்லாதவர்களுக்கு வரம் பெற்ற அதிகாரம் படைத்த வல்லரசராகவும், வெளிநாட்டுப் படையெடுப்பாளராகவும், அந்நியராகவும் தோற்றமளித்தார். சுல்தான் கூறியவையே சட்டமாயின. ஆயினும் அவை குர்ஆனில் கூறப்பட்டவைகளுக்கு மாறாக இருக்கக்கூடாது.

கலீபாவின் பிரதிநிதியாக ஆட்சி செய்தமையால் இசுலாமிய சமயத்தை ஓங்கச் செய்வதும், இசுலாமியரைப் பாதுகாப்பதும் சுல்தானின் கடமையாயிற்று. இசுலாமிய மன்னர்கள் சமய விதிகளுக்கு மாறாகச் செல்ல இயலாது. சமயவழி ஆட்சி சமயக் குருமார்களின் ஆதிக்கத்தை ஓங்கச் செய்து, அரசரின் அதிகார வரம்பைக் குறைத்தது. சிலசமயங்களில் அரசர்கள் குரானின் கட்டளைகளுக்கும், சமயச் சட்டங்களுக்கும் எதிராக நடக்கத் தொடங்கினர்.

டெல்லிச் சுல்தானியத்தின் தலைவராக விளங்கிய அரசர் அனைத்து அதிகாரங்களின் ஊற்றாக விளங்கினார். அவர் இறைமைத் தலைவராகவும், படைத்தளபதியாகவும் விளங்கினார். பொதுவாகத் தேர்தல் முறையே வழக்கிலிருந்தது. உயர்குடியினர், உலேமாக்கள், நிலமானியத் தலைவர்கள் உடன்பட்டு ஒருவரைத் தலைநகரில் அரசராக ஏற்றனர். தேர்தல் முறை என்பது கற்பனையே.

படைத்திறன் வெற்றியாலும், வலிமையாலும் அரசரானவருக்கு முறையான ஒப்புதல் அளிக்கப்பட்டது என்பதே பொருத்தமாகும். ஆளும் அரச மரபிலிருந்தே வாரிசு தேர்ந்தெடுக்கப்பட்டாலும், வாரிசுரிமைச் சட்டம் ஏதுமில்லை. மக்கள் மன்னரிடத்தும், மன்னர் மக்களிடத்தும் உறுதி மொழி மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

அநீதியான ஆட்சி வழங்கினால் அரசரைப் பதவி இறக்கலாம் என்றும் கருதினர். அதுபோலவே உடல், மன ஊனமுற்றவர் இறைமையதிகாரத்தைக் கொள்ள இயலாது. அதுபோலவே பார்வைக் குறைவும், துல்லியமாகக் கணித்தலும் இயலாதபோது பதவி இறங்கினர். அரசப்பதவி புதினமானதாகக் கருதப்படவில்லை. திறமைவாய்ந்த அரசர்களுக்கு எதிராகச் சதிகளும், கிளர்ச்சிகளும் நடைபெற்றன.

நாட்டின் பிரச்சனைகளைத் தீர்க்கக் கூடியவராகச் சுல்தான் விளங்க வேண்டும். பொதுவாக ஆடவரே அரசபதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனினும் இரசியா சுல்தானா ஒரு மாறுதல்.

மரபு வழிப்பட்ட ஆட்சிமுறைக் கொள்கையின்மை குறைபாடு என்று கூறப்பட்டபோதிலும் எண்ணிறந்த திறமைமிக்க அரசர்கள் டெல்லி அரியணை ஏறினர். டெல்லி அரியணையில் அமர்ந்து ஆட்சி செலுத்துவது என்பது எளிதன்று. முட்டாள்களும், சுகவாசிகளும் நீண்ட காலம் அரியணையில் இருந்திட முடியாது. பொதுவாகப் பொருத்தமானவர்களே அரியணையேறினர்.

சுல்தான் இசுலாமியச் சட்டத்தினை விளக்கம் இறுதி அதிகாரம் படைத்தவராக விளங்கினாலும் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட விளக்கங்களுக்கு மாறாகச் செல்லவியலாது.

நடுவர்கள் கருத்து மாறுபாடு கொண்டபோது தம் முடிவினைச் சுல்தான் அறிவித்தார். சுல்தான் ஷாரியத் சட்டங்களுக்கு மாறான சட்டங்களை இயற்றக்கூடாது. சட்டமே உயர்நிலை வகித்தது.

டெல்லி சுல்தான் ஷாரியத் சட்டங்களை மதித்து நடந்தனர். சில வழிதவறுதல்கள் இருந்தன. பெரும் செல்வாக்குடன் விளங்கினர். அரசர் இன்றி எல்லா ஒழுங்கும் கட்டுப்பாடும் போய்விடும். குழப்பத்தையும், தீமையையும் அரசனின் வாள் வலிமையை போக்கியது. நடுநிலை தவறாத சுல்தான் இறுதித்தீர்ப்பு நாளின் போது நபிகளுக்கு அருகில் இருப்பார். மக்கள் தங்களை முன்னேற்ற முழுப்பாதுகாப்பு அளிக்கவேண்டும்.

இசுலாத்தைக் காப்பதும் சுல்தானின் கடமையாயிற்று. குடிமக்களிடையே ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதும், இசுலாமியப் பகுதிகளையும், நெடுஞ்சாலைகளையும் காப்பது அரசரின் கடமையாயிற்று. ஆக்கிரமிப்பிலிருந்து முசுலிம் பகுதிகளில் எல்லைகளைப் பாதுகாப்பது அரசரின் கடமையாயிற்று.

சுல்தான் ஒரு முழுமையான வல்லாட்சியாளர் என்று கூறவதற்கும் இல்லை. அதேநேரத்தில் அவருடைய அதிகாரத்திற்கு வரம்பில்லை என்றும் கூறவியலாது. செயலளவில் வல்லாட்சியாளரின் கற்பனையிலேதான் அரசரின் முழு அதிகாரமும் உள்ளது. மூன்று நூற்றாண்டுகளில் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் சுல்தான் அதிகாரத்தைச் செலுத்தினார் என்பதைக் கண்டறிய இயலாது. இசுலாமிய உலகின் பெயரளவிலான ஆட்சியாளராக விளங்கிய கலீபாவிற்கும் அவர்கள் கட்டுப்படவில்லை. சிலர் மட்டும் கலீபாவின் ஆதரவை நாடியது உண்டு.

படை வெற்றியைக் கொண்டு மட்டுமே தொடக்கத்தில் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தினார். மகன்கள் தந்தைக்குப்பின் ஆட்சிக்கு வரவில்லை. இறக்கும் தருவாயில் அரசர் நியமித்த வாரிசுவின் உரிமை மதிக்கப்படவுமில்லை. உயர்குடியினர்கூடத் தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க இயலாமல் போனதும் உண்டு.

சுல்தானுக்கும் | உலோமாவிற்குமிடையில் ஒருவகையான உடன்பாடு நிலவியது. சுல்தானின் அதிகாரத்திற்கு ஏற்றவகையில் குரானுக்குச் உலோம் விளக்கமளித்ததர். உலோமாவிற்கு உயர்பதவியும், முசுலிம் அமைப்புகளுக்குக் கொடைகளும் அரசர் வழங்கினார். உலோமாவை அரசர் ஒதுக்கிட இயலவில்லை.

இராணுவ வீரர்களானபடியால் அரசியல் நுணுக்கங்கள், சமயச் சிந்தனைகளில் அரசர்கள் அவ்வளவு கவனம் செலுத்தவில்லை. அறிஞர்கள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்களை அவர்கள் வரவேற்றனர். அரசின் விவகாரங்களில் அவர்கள் தலையிட்டபோது வெளியே அனுப்பவும் தயங்கவில்லை. அரசனின் அதிகாரத்திற்குத் தடை உலேமாக்கள், உயர் குடியினர், படைவீரர்களே எனலாம்.

**துறைத்தலைவர்கள்**

டில்லிச் சுல்தானிய அரசின் மைய ஆட்சித்துறை பற்றிக் காண்போம். சுல்தானுடைய கட்டளைகளுக்கு நேரடியாகக் கட்டுப்பட்டு இருந்த பல துறைத்தலைவர்கள் இருந்தனர். துறைத்தலைவர்களுக்கும், சுல்தானுக்கும் இடையில் இருந்த உறவு எந்த நிலையான கொள்கையின் அடிப்படையிலும் இருக்கவில்லை. சுல்தான் வல்லமையுடைவராயின்

துறைத்தலைவர்கள் அவருக்குக் கட்டுப்பட்டனர். சுல்தான் வலிமையற்றவராயின் துறைத்தலைவர்களுக்குக் கட்டுப்பட்டார்.

**நாயாபிமாம்லிகாத்**

சுல்தானுக்கு அடுத்த அதிகாரி நாயாபிமாம்லிகாத் என்பவராவார். அவர் துணைத்தலைவராக விளங்கினார். சில சுல்தான்களின் காலத்தில் மிகச்சிறப்பான இடத்தைப் பெற்று அவலர் யதேச்சதிகாரியாக நடந்து கொண்டார். அரசர் வயது வராத சிறுவராயிருந்தால் இடைக்காலப் பாதுகாப்பளராக அவரே இருந்து ஆட்சியை நடத்தினார்.

நாட்டின் படைத்தளபதியாகவும், உண்மையான அரசப்பிரதிநியாகவும் விளங்கினார். நாயாபிக்கு அடுத்தபடியாக மிக வல்லமையுள்ளவராக விளங்கியவர் வசீர். வசீர் சமயத்துறைத் தலைவராகவும், நிதித்துறைத் தலைவராகவும் விளங்கினார்.

வசீருக்கு அடுத்தபடியாகக் குறிப்பிடத்தக்கவர்கள் அமைச்சர்கள் ஆவர். அமீர் ஹாஜிப், மாலிக் உல் ஹாஜீப் ஆகியோர் அரசருக்கு அருகில் இருந்து பணி செய்தனர். சில் அரசரின் குடும்பத்தைக் கவனித்துக் கொண்டனர். சிலர் மாறில விவகாரங்களைக் கவனிக்கவோ, அல்லது போர்படைகளை ஒட்டிய காரியங்களை மேற்கொள்ளவோ அனுப்பப்பட்டனர். அமீர் ஹாஜிப்புடன் அவரது பிரதிநியான நாயாபி அமீரி ஹாஜீப் என்பவர் இருந்தார். அவர் அரண்மனைக் காவலரின் தலைவராக விளங்கினார் என எலியட்டும், தௌசனும் குறிப்பிடுகின்றனர்.

**திவானி அரீஸ் இ மமாலிக்**

அமீரி ஹாஜீப்புக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்கவர் திவானி அரீஸ் இ மமாலிக் ஆவார். போர்வீரரான இவர் கணக்கெடுப்புத்துறைத் தலைவராக இருந்தார் அரீஸ் என்பவர் ஒன்றுத் துறையை நன்கு கண்காணித்தலையும், படையில் ஒழுங்கு, கட்டுப்பாட்டை நிலை நிறுத்தலையும் செய்து வந்தார். அரீஸிற்குத் துணை அதிகரி ஒருவர் இருந்தார். இவர்களைத் தவிர முஷ்ரிபி மமாலிக், அஷ்ரிபி மமாலிக் என்னும் அதிகாரிகளும் இருந்தனர்.

இப்பதவியினருடன் சுல்தானுடைய ஆணைகளையெல்லாம் எழுதி அரசின் ஆவணங்களைப் பாதுகாத்து வந்த சதர் உல்முல்க் என்னும் பதவியும் சேர்க்கப்பட்டது. சுல்தான் நசீருதீன் காலத்தில் சதர் உல்முல்க் பதவியை வகித்தவரே, முஷ்ரிபி மமாலிக் ஆகிய பதவிகளையும் வகித்தார் எனக் கூறுப்படுகிறது.

**காஜி மாலிக்**

சமயச் சட்டப்படி நீதி வழங்குவதையும், சமயத்திற்கு அறப்பணிகளுக்கும் என அர்ப்பணிக்கப்பட்ட நிலங்களையும் நிதிகளையும் நிர்வகிகத்து வந்தார். ஹாஜீ, கதீப், இமாம் ஆகிய மூவரின் பணிகளையும் ஹாஜிகள் மேற்கொண்டனர். மேலும் சட்டச் சம்பந்தமான எல்லாக் காரியங்களுக்கும் ஹாஜி தலைமை வகித்தார். முதன்மையான நகரங்களிலிருந்த சமயக் கல்லூரிகள் யாவும் ஹாஜிகளின் மேற்பார்வையிலிருந்தன.

அமீர்தாட் என்பவர் கிரிமினல் வழக்குகளை மட்டும் விசாரிக்கும் அதிகாரியாக இருந்திருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது. இந்த மத்திய அரசின் அதிகாரிகள் மாநில அரசின் துறைகளையும் நிர்வகித்தனர்.

**வசீர் பதவியின் தாழ்வு நிலை**

அலாவுத்தீன் கில்ஜியினுடைய காலத்தில் மிகச் சாமானிய மனிதர்கள் அப்பதவியில் அமர்த்தப்பட்டதால், அப்பதவியில் செல்வாக்கு, சிறப்பு ஆகிய குறைந்து அவர் வெறும் நிதித்துறைத் தலைவராகவே கருதப்பட்டார். பிற்காலத்தில் நிதித்துறை திவானி விசாரத் என அழைக்கப்பட்டது. இல்துத்மிஷ்ஷின் காலத்திலிருந்து படிப்படியாக அமைந்த அதிகாரிகளின் கூட்டமொன்று நாட்டில் உருவாயிற்று. அதில் நாயாபிவசீர், முஸ்தாபி, முஷ்ரிபி, காஜி நாதார், பால்லதார் ஆகிய பதவிகள் அடங்கியிருந்தன.

**புதிய பதவிகள்**

நாயாபி வசீர் என்னும் புதிய பதவி இல்துத்மிஷ் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டு பல நாயாபி வசீர்கள் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டன. நதிகள், படகுகள், ஆறுகள் முதலானவற்றைக் கண்காணிக்க ஷ ஹுனாகி பாஹர் என்னும் அதிகாரியை நியமித்தனர். ஜலாலுத்தீன் காலத்தில் திவானி முஸ்தக்ராஜ் என்னம் புதிய பதவியும், முகம்மது துக்ளக் காலத்தல் திவானி, அமீரி, ஹோயி முதலிய பதவிகளும் ஏற்படுத்தப்பட்டன.

**மாநில அரசு**

மைய அரசு விரிவடைந்தற்கேற்ப மாநில ஆட்சித்துறைகளும் விரிவடைந்தன. மாநில அரசுகளின் போக்கில் யதேச்சதிகாரத் தன்மையும், மைய அரசுக் கட்டுப்பாட்டை வெறுக்கும் இயல்புகளும் காணப்பட்டன. மாநிலத்தின் தலைவராக நயாப் என்னும் அதிகாரி விளங்கினார்.

அரசின் பிரதிநிதியாக விளங்கிய அவர் ஜாஹிர்தாராகவும், உயர்குடி மக்களில் ஒருவராகவும் இருந்தார். அவரது ஆட்சிக்குட்பட்ட பெருநகரங்களில் கொத்தவால்கள், கதீஃபுகள், காஜிகள் என்னும் அதிகாரிகள் ஆட்சிபுரிந்தனர். மைய அரசின் சிறிய அமைப்பாக, மாதிரியாக மாநில அரசு விளங்கியது. மைய அரசின் அரீஸ், கஜீப், முஷ்ரிப், முஸ்தாபி முதலிய அதிகாரிகளின் பெயர்கள் மாநில அரசில் காணப்படுகின்றன.

**வருவாய்**

ஹானபி முறையில் சுல்தானியங்களின் பொருளாதாரக் கொள்கை அமைக்கப்பட்டது. சுல்தானியர்களின் அரசுக்கு இருவகையில் வருவாய் கிட்டியது. அவ்விருவகைகளைச் சமயச் சார்புடைய வருவாய்களென்றும், சமயச் சார்பில்லா வருவாய்களென்றும் அழைக்கலாம். சமயச் சார்புடைய வரிகள் இசுலாமியரிடத்திலிருந்து மட்டுமே பெறப்பட்டன. அவைகளை ஜஹாத் என அழைத்தனர். ஜஹாத் ஒரு பொருளுக்கு ஓராண்டு உரிமையாளராக இருந்தவரிடமிருந்து வசூலிக்கப்பட்டது. இவ்வரிக்கு எனத் தனிக் கருவூலம் இருந்ததாக அறிகிறோம். ஜிசியா என்பது இந்துக்கள் மீது விதிக்கப்பட்ட தலைவரியாகும். பெண்கள், குழந்தைகள், முனிவர்கள், இரவலர், கண்தெரியாதோர், உடல் ஊனமுற்றோர் ஆகியோரிடமிருந்து வரி பெறவில்லை. பிரோஸ் ஷா தவிர்த்த மற்றைய அரசர்கள் பிராமணர்களுக்கு வரிவிலக்கு அளித்தனர்.

**வரி உயர்வு**

நிலவரியே அரசுக்கு மிக முக்கியமான வருவாயாக இருந்தது. வருவாய்த்துறை ஆட்சியில், முக்கிய மாறுதல்களைச் செய்தவர் அலாவுத்தீன் கில்ஜியே. இனாம் நிலங்களைத் திரும்பப் பெற்றார். விளைபொருளில் பாதி அரசின் பங்கு ஆயிற்று. வீட்டுவரி, மேய்ச்சல் வரி முதலிய வரிகளும் விதித்தனர். கிராமத்தலைவர்கள் முதலானோர் பெற்ற சலுகைகளையும் அலாவுத்தீன் அகற்றினார். தோவாப்பகுதியில் ஐம்பது விழுக்காடு வரிகளை முகமது துக்ளக் உயர்த்தினார். தண்ணீர்த் தீர்வை வாயிலாகவும், அரசுக்கு வருவாய் கிட்டியது.

**படைவீரர்கள்**

அரசைக் காத்திட வலிமைமிக்க படை ஒன்று இருந்தது. சில படைவீரர்கள் அரசரின் சொந்த பொறுப்பிலும் மற்றவர்கள் உயர்குடியினரின் கட்டுப்பாட்டின் கீழும் இருந்தனர். அரசரிடமிருந்த படையின் எண்ணிக்கையைக் காட்டிலும் உயர்குடியினரின் கட்டுப்பாட்டிலிருந்த படையின் எண்ணிக்கை மிகுதியாய் இருந்தது. எனவே அலாவுத்தீன் கில்ஜி நிலையான வலிவுள்ள படை அமைத்திட வழிகோலினார்.

இக்காலத்தில் படையில் வீரர்களைச் சேர்த்திட எவ்வித விதிமுறைகளும் வகுக்கப்படவில்லை. படையில் பல்வேறுபட்ட துருக்கிய இனத்தவரும், காஜிகள், பெர்சியர்கள், மங்கோலியர்கள், ஆப்கானியர்கள், அராபியர்கள், அபசீனியர்கள், இந்தி முசுலீம்கள், இந்துக்கள் ஆகியோர் இருந்தனர்.

படையில் குதிரைப்படை, காலாட்படை, யானைப்படை ஆகியவை இருந்தனர். காலாட்படைவீரர் பாயக் என அழைக்கப்பட்டனர். வில்லாளிகள் தனுக்குள் எனப்பட்டனர். பால்பன் முதலிய சுல்தான்கள் ஐந்நூறு குதிரை வீரர்களுக்கு ஒரு யானை சமம் என்று கருதினர் படையின் எண்ணிக்கை காலந்தோறும் வேறுபட்டது. படைவீரர்களுக்கு ஊதியமும் நிலப்பகுதிகளும் ஒதுக்கீடும் இருந்தன.

**நீதித்துறை**

சுல்தானியர்களின் காலத்தில் நீதித்துறை சீராகச் செம்மையாக அமையவில்லை. திவானி காஜி என்பவர் மூலம் சுல்தான் நீதி வழங்கினார். திவானி கியாசிட் என்னும் தினத்துறை ஒன்றை முகம்மது துக்ளக் உருவாக்கினார். ஒவ்வொரு நகரத்திலும் காஜி என்பவர் வழக்குகளைத் தீர்த்ததோடு, அனாதை இல்லங்கள், வசதியற்றோர் வாழுமிடங்கள் ஆகியவற்றை மேற்பார்வையிட்டார். காஜிகள் மைய அரசினால் பதவியில் அமர்த்தப்பட்டனர். அதனால் அவர்கள் ஆளுநர்களின் கட்டுப்பாட்டில் இல்லை. சுல்தான்கள் சட்டத்தை மதித்துப் போற்றினர். சிறப்பாக முகமது பின் துக்ளக் முதலானவர்கள் மதித்து நடந்தனர் என இபின்பதூதாவின் வாயிலாக அறிகிறோம். வழக்கு மன்றத்தில் காஜி அமர்ந்த போது சுல்தானுக்கு எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டியதில்லை.

**தண்டனைகள்**

நாட்டின் பாதுகாப்பில் சுல்தான் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். காவல்துறைப் பணிகளைக் கொத்தவால் கவனித்து வந்தார். குற்றவியல் துறை மிகவும் கடுமையானது. கடுந்தண்டனைகள் வழங்கப்பட்டன. கிராமப்புறங்களில் கொத்தவாலின் அதிகாரம்

செல்லுபடியாயிற்று. குற்றவாளிகள் தெருக்களில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். முறையான சீரான ஆட்சிமுறை இல்லை.

**மாநிலங்கள்**

அலாவுத்தீன் கில்ஜி வெற்றகொண்டபோதே மூவகைப் பகுதிகள் இருந்தன. முதலாவது வகை ஏற்கெனவே இருந்தவை, அவை இக்தாஸ்கள் எனப்பட்டன. இரண்டாவது வகை புதிதாகக் கைப்பற்றப்பட்டவை ஆகும். மூன்றாவது வகை மாநிலங்களில் இந்துக்கள் ஆளுநர்களாக இருந்தனர். சுல்தானிய அரசின் உச்சநிலையில் 23 பிரதேசங்கள் இருந்தன. ஒவ்வொரு பிரேசத்திலும் ஷகீபி திவான் என அழைக்கப்பட்ட குவாஜா என்பவர் இருந்தார். குவாஜா ஆளுநருக்குக் கீழ்ப்பட்டவர். இருப்பினும் குவாஜா ஆளுநருக்குத் தடையாக விளங்கியவர். குவாஜா சுல்தானிடம் புகார் செய்தால் ஆளுநர் பதவியிழக்கவும் நேரிடலாம்.

**ஆட்சிப்பிரிவுகள்**

இக்தா என்பது ஆட்சித் துறையில் அடிப்படையான ஒரு பிரிவாக விளங்கியது. பதின்மூன்றாம் நூற்றாண்டில் இருந்த இந்நிலை பதினான்காம் நூற்றாண்டில் பிரதேசங்கள் ஷிக்குகளாகப் பிரிக்கப்பட்டன. தென்னிந்தியாவை நான்கு ஷிக்குகளாக முகமது துக்ளக் பிரித்தார். ஷிக்குகளின் தலைவர் ஷிக்தார் ஆவார். இவர் இராணுவத்துறை அதிகாரி தன் ஆட்சிப்பிரதேசத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நிறுத்துதல் இவரது பணியாக இருந்தது.

ஷிக்குகளுக்கு அடுத்த பிரிவு பர்கான என மூர்லாண்டு உரைக்கிறார். அதற்கு அடுத்த பிரிவு கிராமம் ஆகும். கிராமங்களின் ஆட்சி இந்துக்களின் பொறுப்பில் இருந்தது என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்து ஒன்று இருந்தது.

வழக்குகள் அங்கே தீர்த்துக் கொள்ளப்பட்டன. முக்காடம் என்னும் அதிகாரிகள் கிராமங்களில் வரிவசூல் செய்தனர். சௌத்ரி என்பவர் பொருளாளராகவும், ஆவணக்காப்பாளராகவும் பணியாற்றினார். படை வீரர்களுக்கும், உயர்குடியினருக்கும் நிலங்கள் மானியங்களாக வழங்கினர்.

நிலையில்லாப்படையைச் சார்ந்தவர்கள் ஊதியம் பெற்றனர். தணிக்கை செய்யப்படுவதற்காகக் கணக்குகளைக் கருவூலத்தில் ஒப்படைக்கும்படிக் கட்டளையிடப்பட்டது. கணக்குகளைத் தணிக்கை செய்யும் பணி கருவூலத்தில் நடைபெற்றது. மிகவும் கவனமாகத் தணிக்கை செய்யப்பட்ட பின்னரும் ஆட்சித்துறையில் ஊழல்கள் பல இருந்தன. கையூட்டுப் பெற்று இல்லாததை இருப்பதாகக் காட்டும் அதிகாரிகள் பலர் இருந்தமையால் படைகளின் வலிமையும், பொது ஆட்சித்துறையில் திறமையில் குறையலாயின.

1398ஆம் ஆண்டில் தைமூரின் படையெடுப்பு துக்ளக்குகளின் வீழ்ச்சி ஆகியவை டில்லிச் சுல்தானிய வரலாற்றில் ஒரு குழப்பமான காலத்தைத் தோற்றுவித்தன. மாநிலங்கள் தம்மை ஆண்ட அரசப் பிரதிநிதிகளின் தலைமையின் கீழ் விடுதலை பெற்றுச் சுதந்திர நாடுகளாக மாறி ஒன்றுடன் ஒன்று போரிட்டன. இதனால் அரசியல் இறைமை மாறத் தொடங்கியது.